**<u>அசல் வழக்கு எண். 104/2019</u>**

09.01.2024

**பெயர் –** முத்துகுமார் (Pw 1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(1) தாவாச் சொத்துக்கள் குறித்த ஆதியில் உள்ள மூல ஆவணங்கள் என்ன என்றால் தெரியாது ஆனால் எனக்கு தெரிந்த மூல ஆவணம் கந்தசாமிக் கவுண்டர் அவரது மகனான செல்லமுத்து கவுண்டருக்கு எழுதிய ஆவணம் பற்றி எனக்கு தெரியும். கந்தசாமிக் கவுண்டரின் தகப்பனார் பெயர் நாச்சிமுத்து கவுண்டர். நாச்சிமுத்து கவுண்டருக்கு தாவாச் சொத்தானது பூர்வீக சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாச்சிமுத்து கவுண்டருக்கு கந்தசாமிக் கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் என்ற இரு ஆண் மக்கள் மட்டுமே வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நாச்சிமுத்துக் கவுண்டரின் சொத்தில் அவரது இரண்டு மகன்களுக்கும் சரிபாதி உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி நாச்சிமுத்துக் கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது இரு மகன்களும் வாய் மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கந்தசாமிக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் அவர் வாழ்ந்த காலகட்டத்தில் பி.ஏ.பி வாய்க்காலுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால் அவரது காலகட்டத்திற்கு முன்பே நிலம் கையகப்படுத்தப்பட்டது.

(2) மேற்படி நாச்சிமுத்து கவுண்டருக்கு ஆதியில் மொத்தம் 15 .03 ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பூமியில் கூட்டுப் பட்டா எண். 1110 ன் படி 0.18 ஏக்கர் விஸ்தீர்ண பூமி பொதுத் தடம் என்றால் சரிதான். மேற்படி கந்தசாமிக் கவுண்டர் மற்றும் பழனிச்சாமிக் கவுண்டர் பாகங்களுக்கு UDR ன் படி தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அவர்கள் இருவருக்கு தனித்தனி பட்டாவாக குறிப்பிட்டு பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் யாரால், யாருக்கு, எப்போது எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் கந்தசாமிக் கவுண்டர் அவரது மகன் செல்லமுத்துக் கவுண்டருக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை நகல் எடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி ஆவணம் உள்ள விவரம் இந்த வழக்கிற்காக ஆவணத்தை தேடிய போது தான் தெரியும்.

(3) வா.சா.ஆ.2 ஆவணம் யாரால், யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் எனது தாத்தா செல்லமுத்து கவுண்டர் எனக்கு எழுதிக் கொடுத்ததாகும். இந்த ஆவணத்தைப் பற்றி வேறு ஒரு வழக்கிற்காக நகல் எடுத்த போது அதில் உள்ள விவரம் தெரிய வந்தது. வா.சா.ஆ.3 ஆவணம் குறித்து இந்த வழக்கிற்காக ஆவணத்தை நகல் எடுத்துப் பார்த்த போது தான் தெரிய வந்தது. பிரதிவாதி கணேஷ்வரிக்கு இந்த வழக்கில் உள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையுள்ள ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும் என்றால் சரியல்ல. ஏற்கனவே பைப் லைனுக்காக நான் கணேஷ்வரி மீது வழக்கு தாக்கல் செய்த போதே தெரியும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2024.01.09 21:41:46 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்